**21.01.2026**

**CC.84/2022**

**PW-3, சரோஜா**

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி அவராகவே சொல்ல சொல்ல நீதிமன்றம் அதனை முதன்மை சாட்சியமாக பதிவு செய்கிறது)

**முதல் விசாரணை தொடர்ச்சி**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

சாட்சி இன்று மீண்டும் நீதிமன்றத்தில் முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஆஜரானார். ஏற்கனவே நீதிமன்ற வழக்கு கோப்பில் இருந்த எனக்கு மருத்துவ சிகிச்சை குறிப்பு அசல் 29.01.2019ம் தேதியிட்ட **அசல் (1 எண்ணம்) அ.சா.ஆ.8 ஆகவும்** மற்றும் தற்போது மேற்கண்ட சிகிச்சையின் போது எனக்கு குரு மருத்துவமனையில் எடுக்கப்பட்ட எக்ஸ்ரே அசல் என் வசம் இருந்ததை இந்த நீதிமன்றத்தில் ஒப்படைக்கிறேன். **அது அ.சா.ஆ.9 ஆகும்.** மேற்படி அ.சா.ஆ.8 மற்றும் 9 எதிரிகள் தரப்பில் அதன் செல்லும் தன்மை, உண்மைதன்மை குறித்து ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

அ.சா.1 எனது கணவர் ஆவார். எனது கணவர் திருமங்கலம் முனிஸ்பாலிட்டி ஆபிஸில் வேலை செய்து வருகிறார். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். ஆனால் அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. நான் எனது கணவருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் அனைவரும் எனது உறவினரா என்றால் எனது சம்மந்தக்காரருக்கு உறவினர்கள் ஆவார்கள். எனது சம்மந்தக்காரர் பெயர் நாராயணன் என்றால் சரிதான். எனது சம்மந்தக்காரருக்கு ஆஜர் எதிரிகள் என்ன முறையில் உறவு என்றால் நாராயணனுக்கு தங்கை முறையாவார். மேற்படி நாராயணன் என்பவருக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எதுவும் பிரச்சினை இருந்து வந்ததா என்றால் சொத்து பிரச்சினை இருந்தது. 26.01.2019ம் அன்று காலை 11.00 மணிக்கு நாராயணன் முதலில் ஆஜர் எதிரிகளின் வீட்டிற்கு சென்றாரா என்றால் சென்றார். அன்றைய தேதியில்

எங்கள் ஊரில் ஏதும் விஷேசம் இருந்ததா என்றால் முனியாண்டி கோவில் திருவிழா அன்று நடைபெற்றது. அன்றைய தேதியில் நாராயணன் என்பவர் ஆஜர் எதிரிகளின் வீட்டிற்கு சென்று அவர்களை அடித்து துன்புறுத்தி வந்துள்ளாரா என்றால் தெரியாது. மேற்படி நாராயணன் எனது கணவரின் தூண்டுதலின் பேரில் எதிரிகளின் வீட்டிற்கு சென்றாரா என்றால் இல்லை. மேற்படி நாராயணன் என்பவருடன் எனது கணவர், எனது மகன் சுரேஷ் மற்றும் தினேஷ் ஆகியோர்கள் எதிரிகளின் வீட்டிற்கு சென்றார்களா என்றால் போகவில்லை. எனது கணவர் மற்றும் எனது மகன்கள், நாராயணன் ஆகியோர்கள் சம்பவத்தன்று எதிரிகளின் வீட்டிற்கு சென்று அடித்து வினோத்குமாரின் செயினை பறித்து அடித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் காயம்பட்டு வீட்டில் இருந்த போது அவர்களுக்கு முன்பாக நாங்கள் மருத்துவமனைக்கு சென்று பின்பு புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் எங்கள் வீட்டிற்கு எப்போது வந்தார்கள் என்றால் 26.01.2019ம் தேதி மாலை 4 மணிக்கு வந்தார்கள். வந்தவர்களின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரிகள் வரும் போது எங்களது வீட்டில் எனது மகன்கள் சுரேஷ், தினேஷ் மற்றும் எனது கணவர் , சரோஜா, சம்மந்தக்காரர் நாராயணன், தேவசேனா, தேவசேனாவின் மகள் பிரீத்தி, ஆகியோர்கள் வீட்டில் தூங்கி கொண்டிருந்தோம். முதன்முதலில் ஆஜர் எதிரிகளில் என்னை யார் முதலில் தாக்கினார்கள் என்றால் போலிஸ்பாண்டி என்பவர் ஆவார். ஆஜர் எதிரிகள் வீட்டிற்கு வந்த போது பெயர் தெரியாது என்று சொல்லிவிட்டு தற்போது எவ்வாறு சொல்கிறேன் என்றால் போலிஸ் பாண்டி பெயர் தெரியும். ஆஜர் எதிரிகளின் பெயர் எனக்கு தெரியாது என்று சொன்னாலும் எனது கணவர் சொன்னதின் பேரில் இந்த வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் தூண்டிவிட்டு சம்மந்தக்காரரை பிரச்சினை செய்ய சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. என்னை முதலில் அடித்தது யார் என்றால் போலிஸ்பாண்டி ( 2வது எதிரி) தள்ளிவிட்டார். தள்ளிவிட்டதில் நான் கீழே விழுந்துவிட்டேன்.

26.01.2019ம் தேதி முனியாண்டி கோவில் பொங்கல் அன்று மாலை 4 மணிக்கு சாமி கும்பிட பொதுவாக எல்லோரும் செல்வார்கள் என்றால் சரிதான். அன்றைய தேதியில் நானும் எனது குடும்பத்தாரும் சாமி கும்பிட

சென்றோம் என்றால் சரியல்ல. எனது கணவர் சம்பவ சமயத்தில் எங்கள் வீட்டில் இருந்தார் என்றால் இருந்தார். எனது கணவர் சம்பவ சமயத்தில் வீட்டில் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் எனது வீட்டில் நாராயணன் மற்றும் அவருடைய மருமகள் பிரீத்தி மட்டும் இருந்தார் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் நான் எதிரிகள் சவுக்கு கட்டை மற்றும் செங்கல்லால் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கட்டை மற்றும் செங்கல் எங்கள் வீட்டில் இருந்ததா என்றால் இருந்தது. எத்தனை கட்டை எத்தனை செங்கல்கள் இருந்ததா என்றால் செங்கல் நொருங்கிவிட்டது. ஒரு கட்டை மட்டும் கிடந்தது. அந்த கட்டை மற்றும் செங்கல்லை காவல் நிலையத்தில் ஒப்படைத்தோமா என்றால் ஒப்படைக்கவில்லை. சம்பவ நாளன்று மதியம் 12 மணிக்கு ஆஜர் எதிரிகள் அனைவரும் எங்களது வீட்டிற்கு வந்து நாராயணன் என்பவர் அடித்தது சம்பந்தமாக பேச்சு வார்த்தைக்கு வந்தார்களா என்றால் பேச்சு வார்த்தைக்கு வரவில்லை. என்னை உருட்டு கட்டையால் அடித்தார்களா என்றால் அடிக்கவில்லை. தள்ளிவிட்டார்கள். செங்கல் என் மீது படவில்லை. ஆஜர் எதிரிகள் கட்டை மற்றும் செங்கல்லால் அடித்ததில் காயம் இல்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் அவர்கள் தள்ளிவிட்டதில் எனக்கு காலில் அடிபட்டது. எனக்கு சம்பவத்திற்கு முன்பு கால் வலி கிடையாது. தற்போது ஏன் என்னால் ஏன் நிற்க இயலாது என்றால் சம்பவத்திற்கு பின்பு தான் நிற்க முடியவில்லை. எனக்கு சம்பவத்திற்கு முன்பே எனக்கு காலில் பிரச்சினை இருந்ததால் தான் மருத்துவமனைக்கு சென்று அதற்கு தான் சிகிச்சை பெற்றேன் என்றால் சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் ஆண்கள் பெயர் சொல்லியுள்ளேன். பெண்கள் பெயர் சொல்லவில்லை. எனது கணவர் கோவில் திருவிழாவில் சாமி தூக்குவாரா என்றால் நிறைமாலை தூக்குவார். அந்த நிறைமாலை எவ்வளவு எடை இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த நிறைமாலை சுமார் 300 கிலோ இருக்கும் என்றால் சரியல்ல. அந்த திருவிழாவில் பொதுவாக அனைவரும் மதுகுடிக்கும் பழக்கம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவ சமயத்தில் நான் எனது வீட்டில் இல்லை என்றால் சரியல்ல. எனது சம்மந்தக்காரர் தூண்டுதலின் பேரில் எதிரிகளின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால்

சரியல்ல. எனது மகன்களுக்கும் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எனது மகன்கள் காயத்திற்கு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். எனக்கு சம்பவத்திற்கு முன்பு கால் வலி இருந்தது என்றாலும் அதனை பயன்படுத்தி எதிரிகள் தள்ளிவிட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை போலிசார் சம்பவத்திற்கு மறுநாள் விசாரித்தார்கள். 27.01.2019ம் தேதி போலிசார் சம்பவயிடத்திற்கு வந்தார்களா என்றால் 7 மணிக்கு வந்தார்கள். முன் பகை காரணமாக எதிரிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னாலும் இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 84/2022**
**Prosecution Witnesses :4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **தினேஷ்** | Caste | : |
| Husband Name/ Father Name | : **முனிஸ்வரன்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி அவராகவே சொல்ல சொல்ல நீதிமன்றம் அதனை முதன்மை சாட்சியமாக பதிவு செய்கிறது)
**(21.01.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது திருமங்கலத்தில் கற்பகம் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் திருமங்கலம் நகராட்சியில் டிரைவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 26.01.2019ம் தேதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் மொத்தம் 10 பேர் அப்போது நாங்கள் வசித்த கள்ளிக்குடி அருகில் உள்ள வடக்கம்பட்டி வீட்டிற்கு வந்தார்கள். அந்த 10 பேர்களும் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். எதிரிகள் அனைவரும் எங்கள் வீட்டிற்கு வந்த கதவை தட்டினார்கள். நாங்கள் அப்போது தூங்கி கொண்டிருந்தோம். அப்போது எனது அண்ணன் சுரேஷ் கதவை திறந்தார். திறந்தவுடன் அவரை தரதரவென இழுத்து அடிக்க தொடங்கினார்கள். அதனை கேட்க போன எனது தகப்பனார் முனிஸ்வரனையும் அடித்தார்கள். பின்பு நானும் போய் தடுக்க போனேன். என்னையும் கட்டையாலும் செங்கல்லாலும் அடித்தார்கள். பக்கத்து வீட்டுக்காரர்கள் வந்து தடுத்தார்கள்.

எனது அப்பாவுக்கு கட்டையால் அடித்ததில் தோள்பட்டையில் காயம் இருந்தது. அதனால் முதலில் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை அப்பல்லோ மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு சிகிச்சை எடுத்தோம். எனது அம்மாவிற்கு தள்ளிவிட்டதில் காலில் காயம் ஏற்பட்டது. எங்களுக்கும் சிறு காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1 முதல் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது அப்பா பெயர் முனிஸ்வரன் ஆகும். எங்கள் வீட்டில் நான் அப்பா, அம்மா, எனது அண்ணன்கள் சுரேஷ், நாகேந்திரகுமார் ஆகியோர்கள் உள்ளார்கள். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு நன்கு தெரியும். நாராயணன் என்பவர் எனக்கு என்ன முறை என்றால் எனது மூத்த அண்ணன் சுரேஷ் – ன் மாமனார் ஆவார். நாராயணனின் மகள் பிரீத்தியதான் எனது அண்ணனுக்கு திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரிதான். மேற்படி நாராயணன் என்பவருக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் மேற்படி சொத்து பிரச்சினை இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி நாராயணனுக்கும் எதிரிகளுக்கும் சொத்து பிரச்சினை இருந்தது என்றால் சரியல்ல. கடந்த 26.01.2019ம் தேதி நான் சுரேஷ், நாராயணன், பிரவீன், முனிஸ்வரன் மற்றும் 10 பேர் ஆஜர் எதிரிகளின் வீட்டிற்கு சென்றோமா என்றால் செல்லவில்லை. நாங்கள் தான் ஆஜர் எதிரிகளின் வீட்டிற்கு சென்று 3வது எதிரி வினோத் மற்றும் அவருடைய அக்கா 6வது எதிரி பாண்டியம்மாள் அவர்களை அடித்து காயம் ஏற்படுத்திவிட்டு வந்தோம் என்றால் சரியல்ல. மேற்படி ஆஜர் எதிரிகள் அனைவரும் எங்கள் வீட்டிற்கு வந்தார்களா என்றால் வந்தார்கள். எனது தகப்பனார் சம்பவத்தன்று எப்போது புகார் கொடுத்தார் என்றால் மாலை 5 முதல் 6 மணிக்கு கொடுத்தார். புகாரை எனது தகப்பனார் 26.01.2019ம் தேதி சொன்ன நேரத்தில் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 26.01.2019ம்தேதியன்று எங்கள் ஊரில் பொங்கல் திருவிழா என்றாலும் அதில் எனது தகப்பனார் நிறைமாலை தூக்குவார் என்றாலும் சரிதான். எப்போது எனது தகப்பனார் நிறைமாலை தூக்குவார் என்றால் 25.01.2019ம் தேதி மாலை நிறைமாலை தூக்குவார். ஆனால் சம்பவம் மறுநாள் 26.01.2019ம் தேதி நடந்தது. பொதுவாக மாலை 4

முதல் 5 மணியளவில் நிறைமாலை தூக்குவார் என்றால் சரிதான். எனது தகப்பனார் 26.01.2019 ம் தேதியன்று தான் நிறைமாலை தூக்கினார் என்றால் சரியல்ல. அந்த நிறைமாலை எவ்வளவு எடை இருக்கும் என்றால் 25 முதல் 30 கிலோ இருக்கும் அதனை எனது அப்பா மட்டும் தான் தூக்குவார். முதலில் எனது அண்ணன் சுரேஷ் –ஐ ஜெகன் மற்றும் போலிஸ் பாண்டி என்ற பாண்யடிராஜன் ஆகியோர்கள் தாக்கினார்கள். அதன் பிறகு எனது அப்பா முனிஸ்வரனை கதிரேசன், ராஜா, வினோத் ஆகியோர்கள் தாக்கினார்கள். 3வதாக நான் சென்ற போது என்னை கதிரேசன் மற்றும் ராஜா கட்டையால் வலது தோள்பட்டையில் தாக்கினார்கள். எதிரிகள் வரும் போது 2, 3 உருட்டு கட்டைகளை எடுத்துவந்தார்கள். என்னை அடிக்கும் போது முதலில் கட்டையால் அடித்தார்கள். அதன் பிறகு கீழே கிடந்த செங்கல்லை எடுத்து அடித்தார்கள். உருட்டு கட்டை 2, 3 எதிரிகள் கொண்டு வந்தார்கள். மற்ற செங்கல்கள் மற்றும் சவுக்கு கம்புகள் கீழே கிடந்து எடுத்தார்கள். உருட்டு கட்டை அடிக்கும் போது உடைந்ததா என்றால் அவர்கள் கொண்டு வரும் போது உடையவில்லை. செங்கல்லை பொதுவாக எறிந்தார்கள். அந்த செங்கல் என் மீது எனது அண்ணன் சுரேஷ் மீதும் பட்டது. 4, 5 செங்கல்லை கொண்டு எறிந்திருப்பார்கள். அந்த செங்கல்கள் எங்கள் வீட்டு அருகில் கிடந்தது என்றால் சரிதான். எனது அண்ணன் சுரேஷ்க்கு வலது மற்றும் இடது தோள்பட்டை, முதுகு ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். சாதாரண சிராய்ப்பு காயம் என்பதால் வெளிநோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டோம். நாங்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்களுக்கு அவ்வாறு காயம் இல்லை என்பதாலும் எங்களால் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் முதலில் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அதற்கு முன்பே கள்ளிக்குடி காவல் நிலையம் சென்றுவிட்டு தான் மருத்துவமனைக்கு சென்றோம்.

காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கும் போது மாலை 5 முதல் 6 மணிக்குள் சென்றோம். நான் அம்மா அப்பா, சுரேஷ், நாராயணன் ஆகியோர்கள் சென்றோம். அப்போது காவல் நிலையத்தில் புகாரை

வாங்கினார்களா என்றால் எங்களது நிலையை பார்த்து மருத்துவமனையில் சிகிச்சையளிக்க சொன்னார்கள். நாங்களும் மருத்துவமனைக்கு உடனே வந்துவிட்டோம். நாங்கள் எல்லாரும் புகார் கொடுக்க ஆட்டோவில் வந்தோம். எனது அம்மாவிற்கு சம்பவத்திற்கு முன்பு நடக்க முடியாத வலி காலில் இருந்ததா என்றால் அப்படி எதுவும் இல்லை. எனது அம்மாவிற்கு சம்பவத்திற்கு முன்பு மூட்டு வலி இருந்தது என்றாலும் அதற்கு எனது அம்மா குரு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்றாலும் சரியல்ல. காவல் நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு செல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 45 நிமிஷம் ஆகும். எல்லாரும் மருத்துவமனைக்கு வந்துவிட்டோம் என்றால் சரிதான். முதலில் எனது அப்பாவை தான் சிகிச்சையில் சேர்த்தோம். நாங்கள் காவல் நிலையத்தில் சொன்ன போது காவல் நிலைய அவர்கள் மருத்துவ நமுனா எதுவும் கொடுத்து மருத்துவமனையில் சேர்த்தோமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. முதல் உதவி எனது அப்பாவிற்கு திருமங்கலம் மருத்துவமனையில் செய்தார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று எனது அப்பா திருமங்கலம் நகராட்சியில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சேர்த்ததற்கான எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்துள்ளோம். திருமங்கலம் அரசு மருத்துவமனையில் 1/2 மணி நேரம் முதல் 1 மணி நேரம் வரை எனது அப்பா இருந்தார். அதன் பிறகு அங்கு இருந்து 108 ஆம்புலன்சில் மதுரை அப்பல்லோ மருத்துவமனைக்கு கூட்டி சென்றோம். எனது அப்பாவுக்கு மட்டும் தான் முதல் சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கும் எனது அண்ணன் சுரேஷ்க்கும் முதல் உதவி சிகிச்சையளிக்கப்பட்டது. அது குறித்து ஆவணங்கள் எதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நாங்கள் மாலை 7.30 மணி முதல் 08.30 மணிக்குள் அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்றோம். அப்பல்லோ மருத்துவ மனையில் எனது அப்பாவுக்கு மட்டும் தான் சிகிச்சை அளிக்கப்பட்டது. வேறு யாருக்கும் சிகிச்சையளிக்கவில்லை. சம்பவயிடத்தில் உருட்டு கட்டை தவிர சவுக்கு கட்டை மற்றும் செங்கல் கிடந்தது. போலிசார் கள்ளிக்குடி காவல் நிலையத்தில் இருந்து தான் விசாரணக்கு வந்தார்கள். எனது அப்பாவின்

தூண்டுதலின் பேரில் தான் எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு சொல்லியுள்ளோம் என்றாலும் நாங்கள் தான் எதிரிகளின் வீட்டிற்கு சென்று பிரச்சினை செய்தோம் என்றால் சரியல்ல. நானும் பிரவீனும் வினோத் என்பவரை அடித்தோமா என்றால் அடிக்கவில்லை. எங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு சரியான எவ்வித ஆவணமும் இல்லை என்றாலும் அவ்வாறு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடக்கும் போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் கொத்தனார் கண்ணன், எனது சித்தப்பா கண்ணன், காசிமாயன் ஆகியோர்கள் இருந்தார்கள். கொத்தனார் கண்ணன் உள்ளூரை சேர்ந்தவர். எனது சித்தப்பா கண்ணன் வடக்கம்பட்டியை சேர்ந்தவர். காசிமாயன் என்பவர் உசிலம்பட்டி அருகில் உள்ள சிந்துபட்டியை சேர்ந்தவர். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை